98 நு ஹும் சித்திரை மீ 1௳

17 APR 1943

திருப்புகழமிர்தம் காரியாலயம்,
காங்கேயநல்லூர்.

G DASAN'S ENGRAVERS MADRAS

18941

வருட சந்தா ரூ. 2–0–0.

உ

முருகா

திருப்புகழமிர்தம்

எட்டாவது ஆண்டு

மெய்யன்புடையீர்!

எந்தை கந்தவேள் இன்னருளாலும், ஆன்றோர் ஆசீர்வாதத்தாலும், சந்தா நேயர்களின் ஆதரவாலும் நமது திருப்புகழமிர்தத்திற்கு ஏழு ஆண்டுகள் முடிவு பெற்று சுபாநு சித்திரை மதி 1-ம் நாளாகிய இன்று 8-வது ஆண்டு பிறக்கின்றது. கடிதம் ஒன்றுக்கு இருபதாக விலையேறி[illegible] திருப்புகழமிர்தத்தை யாம் நடத்துவதின் நோக்கம் உலகில் சன்மார்க்கம் பரவ வேண்டுமென்பதும், மக்கள் நன்னெறியில் நடந்துய்ய வேண்டுமென்பதுமேயாம். இடையீடின்றி பற்பல ஊர்களுக்கு விரிவுரை நிகழ்த்தும் பொருட்டு நாள்தோறும் சென்றுகொண்டிருக்கும் நிலைமையிலும் திருப்புகழமிர்தத்தை எழுதி வருவது உலகில் அருளொழுக்கம் ஓங்கும் பொருட்டே. ஆகலால் அன்பர்கள் ஒவ்வொருவரும் இந்த அடிப்படையான நோக்கத்தை உளத்தில் அமைத்துக் கொண்டு இன்னும் பற்பலரைத் திருப்புகழமிர்தத்திற்கு சந்தாதாரர்களாகச் சேர்ப்பித்து இதனை யாண்டும் பரவச் செய்து அன்பு நெறியை வளம்படுத்துமாறு வேண்டுகின்றோம்.

இதுகாறும் நமது திருப்புகழமிர்தத்திற்குக் கைம்மாறு கருதாது உழைத்துவரும் அன்பர்கள், திரு நாகை. ஜெ மு சாமியவர்கள், உறையூர், ரா ப சாமிக்கண்ணு பிள்ளையவர்கள், நெல்லை, வீ. சங்கரன்பிள்ளை யவர்கள் திருச்சி. திருப்புகழ் சுப்பராவ் அவர்கள். குன்னத்தூர், திரு. சி மு காமாக்ஷி முதலியார் அவர்கள், ஈரோடு, திரு. கே. வீ. நடராஜ முதலியார் அவர்கள், தஞ்சை, திரு எம். குஞ்சிதபாதம்பிள்ளை யவர்கள், கும்பகோணம், திரு. டி. பீ சக்கிரபாணி செட்டியார் அவர்கள், முதலிய எல்லா அன்பர்கட்கும் எமது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றோம்.

சந்தா சேர்த்து உதவும் அன்பர்கட்கும், சந்தா நேயர்கட்கும், ஆயுட்சந்தா அன்பர்கட்கும் முருகவேள் முழுமுதற் கருணை முன்னின்று அருள் செய்யுமாக.

அன்பன்,

கிருபானந்தவாரி.

நேசசந்தனத்தூள்.

நல்ல மணமும் குணமும் உடையது. பூஜா காலத்தில் தூபம் போடலாம் அன்பர்கள் யாவரும் வாங்கி உபயோகிக்கவும்.

சின்ன பாக்கட்டு 1 — 0-2-6.

பெரிய பாக்கட்டு 1 — 0-5-0

ஜே. கே. எஸ். ஷா

108 சாமிநாய்க்கன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

சென்னையில் எல்லா வியாபார ஸ்தலங்களிலும் கிடைக்கும்.

உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்

(All Rights Reserved)

"திருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் 8. Vol 8.	சுபாநு ஹு சித்திரை மீ 1௳ ஏப்ரல் 1943	இதழ் 1. No 1.

திருப்புகழ்

கொங்கணகிரி.

ஐங்கரனை யொத்தமனை மைப்புல னகற்றிவள
ரந்திபக லற்றநினை வருள்வாயே
அம்புவி தனக்குள்வளர் செந்தமிழ் வழுத்தியுனை
அன்பொடு துதிக்கமன மருள்வாயே
தங்கிய தவத்துணர்வு தந்தடிமை முத்திபெற
சந்திர வெளிக்குவழி யருள்வாயே
தண்டிகை கனப்பவுசு எண்டிசை மதிக்கவளர்
சம்ப்ரம விதத்துடனே யருள்வாயே
மங்கையர் சுகத்தைவெகு இங்கித மெனுற்றமன
முன்றனை நினைத்தமைய அருள்வாயே
மண்டலிக ரப்பகலும் வந்தசுப ரக்ஷைபுரி
வந்தணைய புத்தியினை யருள்வாயே
கொங்கிலுயிர் பெற்றுவளர் தென்கரையி லப்பரருள்
கொண்டுஉட லுற்றபொரு ளருள்வாயே
குஞ்சர முகற்கிளைய கந்தனென வெற்றிபெறு
கொங்கண கிரிக்குள்வளர் பெருமாளே.

பதவுரை.

குஞ்சர முகற்கு - யானைமுகமுடைய விநாயகப் பெருமானுக்கு, இளைய - இளையவராகிய, கந்தன் என வெற்றிபெறு - கந்தப் பெருமான் என்று அசுரர்களையெல்லாம் வெற்றி பெறுகின்ற, கொங்கணகிரிக்கு உள் வளர் - கொங்கணகிரி என்னுந் திருமலையில் எழுந்தருளி வளர்கின்ற, பெருமாளே - பெருமையின் மிக்கவரே! ஐங்கரனை ஒத்தமனம் - ஐந்து திருக்கரங்களையுடைய விநாயகப் பெருமானைப்போல் எல்லாக் காரியங்களுக்கும் முற்படுகின்ற மனமானது, ஐம்புலம் அகற்றி - மெய்வாய் கண் மூக்குச் செவி என்ற ஐந்து புலன்களின் வழியே செல்லுந் தொழிலை நீக்கி, வளர் - வினைகளை வளர்க்கின்ற, அந்தி பகல் அற்ற நினைவு அருள்வாயே - மறப்பு நினைவு என்ற கேவல சகலங்கள் கழன்று நினைவற்ற நினைவைத் தந்தருள்வீர்; அம்புவி தனக்கு உள் வளர் - அழகிய பூமண்டலத்தில் என்றும் நின்று வளர்கின்ற, செம்தமிழ் வழுத்தி - செம்மைப் பண்புடைய தமிழ் மொழியால் பரவுதல்புரிந்து, உனை அன்பொடு துதிக்க மனம் அருள்வாயே - தேவரீரை அன்போடு துதிப்பதற்கு நன் மனத்தை யருள்புரிவீர்; தங்கிய தவத்து உணர்வு தந்து - நிலை பெற்ற தவத்தினாலெய்தும் மெய்யுணர்வைக் கொடுத்தருளி, அடிமை முத்திபெற - அடிமையேன் சிவகதியைப் பெறுமாறு, சந்திரவெளிக்கு - சந்திரவொளி வீசுகின்ற மேலைவெளிக்கு, வழி அருள்வாயே - வழியை அருள்புரிவீர்; தண்டிகை - பல்லக்கு, கனபவுசு - பெருமை தங்கிய உயர்வு முதலியவைகளுடன், எண்திசை மதிக்க வளர் - எட்டுத் திசைகளிலுள்ளோரும் மதிக்குமாறு வளர்ச்சியடைகின்ற, சம்ப்ரம விதத்து உடனே அருள்வாயே - மிகுந்த மகிழ்ச்சியுடன் வாழ்கின்ற பெருவாழ்வை அருள்புரிவீர்; மங்கையர் சுகத்தை - பெண்களது இன்பத்தை, வெகு இங்கிதம் என உற்றமனம் - மிகுந்த இனிமையென்று எண்ணி அதில் சேர்ந்துள்ள மனமானது, உன்தனை நினைத்து அமைய அருள்வாயே - தேவரீரை சதா தியானித்து அமைதியடைய அருள்புரிவீர்; மண்டலிகர் - அரசர்கள், ராபகலும் - இரவு பகலும், வந்து சுபராஜ்யபுரி - நன்னெறி சேர்ந்து உயிர்களை நன்மையாகக் காத்து அரசுபுரிந்து, வந்து அணைய புத்தியினை அருள்வாயே - நின் திருவடியிலே வந்து சேர நல்வழியைத் தந்தருள்வீர்; கொங்கில் - கொங்குநாட்டில், தென்

கரையில் - அவிநாசி என்ற திருத்தலத்தின் அணித்தாயுள்ள ஏரியின் தென்கரையில், அப்பர் அருள்கொண்டு - சிவபெருமானுடைய திருவருளைக் கொண்டு, உயிர் பெற்று உடல்உற்ற பொருள் - இழந்த உயிரைப்பெற்று முதலைவாயினின்றும் உடம்பு வெளிப்பட்ட திருவருட் செல்வத்தை, அருள்வாயே - அருள்வீராக.

பொழிப்புரை.

யானைமுகமுடைய விநாயகப்பெருமானுக்கு இளையவராக விளங்கி, மூன்று உலகங்களையுந் தனது வலிமையால் வற்றச்செய்து வெற்றிகொள்ளும், கொங்கணகிரி என்னுந் திருமலைமேல் எழுந்தருளி வளர்கின்ற பெருமிதமுடையவரே! விநாயகரைப்போல் எல்லாக் காரியங்களிலும் முற்படுகின்ற மனத்தை ஐம்புலன்களின் வழியே செல்லவொட்டாது தடுத்து நினைப்பு மறப்பு நீங்கிய சகசநிலையில் நிற்க அருள்புரிவீர்; பூமண்டலத்தில் வளர்கின்றதாகிய செந்தமிழ்ப் பாடலால் தேவரீரை அன்புடன் துதிசெய்து உய்யுமாறு நன்மனத்தை யருள்புரிவீர்; நிலைபெற்ற தவத்தால் வருகின்ற மெய்யுணர்வைத் தந்து அடியேன் சிவகதி பெறுமாறு சந்திர மண்டலமாகிய குளிர்ந்த மேலைப் பெருவெளிக்கு வழியை அருள்புரிவீர்; பல்லக்கு மிக்க உயர்வு முதலியவைகளுடன், எட்டுத் திசைகளிலுள்ள யாவரும் மதிக்குமாறு வளர்ச்சியடைகின்ற மிகுந்த மகிழ்ச்சியை அருள்புரிவீர்; பெண்கள் சுகத்தை மிக்க இனிமையாகக் கருதியதிற் சென்ற என் மனம் தேவரீரைத் தியானித்து அமைதியடைய அருள் புரிவீர்; அரசர்கள் இரவும் பகலும் உயிர்களை இனிது புரந்து சிவநெறி சார்ந்து உய்ய நல்லறிவைத் தந்தருள்வீர்; கொங்குநாட்டில் அவிநாசியில் ஏரிக்குத் தென்கரையில், சுந்தரமூர்த்தியினால், சிவபெருமான் திருவருள் துணைகொண்டு, முதலைவாய்ப்பட்டமகன் உயிர் பெற்று உடம்புடன் வெளிப்பட்ட திருவருட் செல்வத்தை அருள் புரிவீராக.

விரிவுரை.

ஐங்கரனை யொத்தமனம்:—

விநாயகர் ஐந்து திருக்கரங்களால் ஐம்பெருந் தொழில்களை யாற்றுவதுபோல், மனம் ஐம்புலன்களால் உலக விவகாரத்தை நடத்துகின்றது. என்பது ஒருவர் உரை.

அன்றியும், ஐங்கரன் என்பதற்கு யானை என்று பொருள்கொண்டு, யானை இடையறாது அசைந்து கொண்டே இருப்பதுபோல் மனம் அசைந்துகொண் டிருக்கின்றது என்பது. வேறு ஒருவர் உரை.

அன்றியும், ஐங்கரன் என்பதற்கு யானை என்று பொருள்கொள்வது பொருந்தாது. வேறு எந்த இடங்களிலும் அப்படி நூல் வழக்கில் காணப்படவில்லை. மனதை யானையாக சங்கரர் சிவானந்தலஹரியில் உருவகர்பண்ணி யிருக்கின்றார். அது இந்த வெளியீட்டிலேயே வருகின்றது. எனினும் ஐங்கரன் என்பதற்கு ஐந்து கரங்களை யுடையவன் என்பதே பொருள்.

இனி, ஐங்கரமுடைய கணேசமூர்த்தி எல்லாக் காரியங்கட்கு முற்பட்டு நிற்பவர். அவரின்றி ஒரு கருமமும் நிகழாது. அதுபோல் மனமும் எல்லாக் கருமங்கட்கும் முற்பட்டு நிற்பது. மனமின்றி ஒரு கருமமும் நிகழாது. "தேவரனையர் கயவர்" என்று இழிவு சிறப்பாகக் கூறியதுபோல் இம் மூடமனமும் முன்னிற்கின்றது என்று மிக நயமும் அதிசயமும் உண்டாக சுவாமிகள் உரைக்குந் திறனை உன்னுந்தொறும் உவகை ஊற்றெடுக்கின்றது.

அந்திபகலற்ற நினைவு:—

அந்தி - மறப்பு, பகல் - நினைவு இவற்றை வடநூலார் கேவல சகலம் என்பர். இரவு பகலற்று நிற்கு நிலைதான் சிறந்தநிலை. அதனை அருணகிரியார் பல இடங்களில் இனிது பேசுகின்றார். அந்நிலையையடைய ஒவ்

வொருவரும் பெரிதும் முயற்சிக்க வேண்டும். அது நினைவும் மறதியும் இல்லாத நடுநிலை.

"அந்திபக லென்றிரண்டையு மொழித்து"
—திருப்புகழ்.

"இராப்பகலற்ற இடத்தே இருக்கை எளிதல்லவே"

"அல்லும் பகலு மில்லாச்
சூதானதற்ற வெளிக்கே ஒளித்துச் சும்மா இருக்கப்
போதாய் இனி மனமே தெரியாதொரு பூதர்க்குமே"
—அலங்காரம்

"கருதா மறவா நெறிகாண எனக்
கிருதாள் வனசந் தரவென் றிசைவாய்"
—அநுபூதி.

இரவுபக லற்றவிடத் தேகாந்த யோகம்
வரவுந் திருக்கருணை வையாய் பராபரமே.

கங்குல்பக லற்றதிருக் காட்சியர்கள் கண்டவழி
எங்கும் ஒருவழியே எந்தாய் பராபரமே
—தாயுமானார்.

அம்புவி தனக்குள்வளர் செந்தமிழ்:—

செந்தமிழ் செம்மைப் பண்புடையது. ஏனைய மொழிகளைப்போல் தேய்ந்தும் இறந்தும் உருமாறியும் சிதைந்தும் போகாமல் என்றும் நின்று வளர்கின்ற மொழி தமிழ்.

"என்றுமுள தென்றமிழ் இயம்பி இசைகொண்டான்"
—கம்பர்.

இனிமையு நீர்மையும் தமிழெனலாகும்
—பிங்கல நிகண்டு.

"ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம் வியந்து செயன் மறந்து வாழ்த்துதுமே"
—சுந்தரம்பிள்ளை.

அன்போடு துதிக்கமனம் அருள்வாயே:—

செந்தமிழ்ப் பாடல்களால் செம்பேனி எம்மானை

என்புருகிக் 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி', துதிக்க வேண்டும்.

என்பே விறகா இறைச்சி யறுத்திட்டு
பொன்போன் மேனியைப் பொரிய வறுப்பினும்
அன்போடுருகி யகங்குழைவார்க் கன்றி
என்போன் மணியை யெய்த வொண்ணாதே
—அப்பர்.

சந்திர வெளிக்குவழி:—

ஆறுதாரமுங் கடந்து, பிரமரந்திரமுந் தாண்டி சந்திரமண்டலமாகிய அமுத மண்டலத்துடன் கூடிய மேலைவெளி.

"நாமமதி மீதி லூறுங்கலா இன்ப அமுதூறல்
நாடி யதன்மீது போய்நின்ற ஆனந்த
மேலை வெளியேறி நீயின்றி நானின்றி
நாடியினும் வேறு தானின்றி வாழ்கின்ற
—தொருநாளே"

தண்டிகை.........அருள்வாயே:—

பல்லக்கு பெருமை முதலிய விரும்பும் ஆன்மாக்களும் அவற்றை இறைவனிடங் கேட்டு உய்யும் பொருட்டு விருப்பு வெறுப்பற்ற சுவாமிகள் இங்ஙன் கூறியருளினார்கள்.

மண்டலிகர்..........அருள்வாயே:—

மன்னர்கள் மன்னுயிரை இனிது அறநெறி வழுவாது புரந்துய்யுமாறு வேண்டுகின்றார்.

"வேந்தனும் ஓங்குக"
"மன்னன் கோன்முறை யரசுசெய்க"

என்ற திருவாக்குகள் போலும்.

நெல்லு முயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்
—புறநானூறு.

MADRAS

ஆதலால் அரசன் எவ்வழியோ அவ்வழி குடிகளும் நிற்பர். எனவே அரசன் நன்னெறி நிற்கில் குடிகளும் திருந்தி நல்வழிப்படுவர். மன்னன் உலகிற்குத்தான் அரசன் என்று எண்ணாது காவலன் என்று எண்ணுதல் வேண்டும்.

கோங்கிலுயிர் பெற்று...... ...அருள்வாயே:—

அவிநாசியில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் மகனை இழந்து வருந்தும் தாய்தந்தையரைக் கண்டு உள்ளம் இரங்கி, நீர்வற்றிய ஏரியினிடம்போய்,

உரைப்பா ருரையுகந் துள்கவல்லார் தங்க ளுச்சியாய்
அரைக்கா டரவா ஆதியு மந்தமு மாயினாய்
புரைக்காடு சோலைப் புக்கொளியூ ரவிநாசியே
கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச் சொல்லு காலனையே.

என்று பாடியருளலும், வருணன் நீரையும் பிரமன் முதலையையும், முதலையிற்றில் பிள்ளை உடம்பையும், இயமன் பாலன் உடம்பில் உயிரையும் விட்டனர்கள். முதலைவாயினின்றும் பாலன் வெளிப்பட்டனன். அத் திருவருட் செல்வத்தைத் தருமாறு வேண்டுகின்றனர்.

கருத்துரை.

இபமாமுகன்றனக்கு இளையவரே! கோங்கண கிரியில் வாழும் குமாரக் கடவுளே! மனம் அடங்கவும், தமிழால் துதிக்கவும், மேலைவெளிக்கு வழியும், இன்பநிலையும், தியான நிலையும் அரசர் நன்னெறி நிற்கவும், திருவருட் செல்வமும் தந்தருள்வீர்.

இரட்டைப் பழமொழிகள்.

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்;
அறத்தின் அழகு கரத்தில் தெரியும்.
2. அடக்கமுள்ளார் இன்பம் பெறுவார்;
அடக்கமில்லார் துன்பம் பெறுவார்.

உ

ஓம் குஹாய நம:

கந்தரலங்காரம்

(257-ம் பக்கத் தொடர்ச்சி)

(49) சூரிற் கிரியிற் கதிர்வே லெறிந்தவன் றொண்டர்குழாஞ்
சாரிற் கதியன்றி வேறிலை காண்டண்டு தாவடிபோய்த்
தேரிற் கரியிற் பரியிற் றிரிபவர் செல்வமெல்லாம்
நீரிற் பொறியென் றறியாத பாவி நெடுநெஞ்சமே.

பதவுரை.

தண்டு தாவடி போய் - சைனியங்களுடன் பிரயாணம் சென்று, தேரில் - தேரின்மீதும், கரியில் - யானையின்மீதும், பரியில் - குதிரையின்மீதும், திரிபவர் செல்வம் எல்லாம் - ஏறி உலாவுகின்ற அரசர்களுடைய செல்வம் முழுவதும், நீரில் பொறி என்று அறியாத - நீரின்மேல் எழுதிய எழுத்துக்கு நிகரென்று உணர்ந்து உய்வுபெறாத, பாவி நெடு நெஞ்சமே - பாவியாகிய நீண்ட எண்ணத்துடன் கூடிய மனமே! சூரில் சூரபன்மன் மேலும், கிரியில் கிரௌஞ்ச மலையின் மேலும், கதிர்வேல் எறிந்தவன் - ஒளியையுடைய வேற்படையை விடுத்தருளிய முருகக் கடவுளின், தொண்டர் குழாம் - அடியார்களது திருக் கூட்டத்தை, சாரின் - அடைந்தனையாயின், கதி அன்றி வேறு இல்லை - அதனை விடச் சிறந்த கதி உனக்கு வேறு எங்கும் இல்லை.

விரிவுரை.

சூரில்:—

சூர் - சூரபன்மன். தேவர்கட்கு மிகுந்த துன்பத்தை விளைவித்தானாதலின் இப்பேர் பெற்றனன். 1008 அண்டங்களையுந் தனது ஆட்சிக்கு உட்படுத்தி 108 யுகங்கள் அரசுபுரிந்தனன். வான் சுமந்த தேவர்கள் மீன் சுமந்துழக்கவும், திருமால் பெருமலாகியலையவும், பிரமன் பிரமமுற்றலையவும் திசைபாலகாகள்

பாலகர்போல் பயனற்று வாளாவிருக்கவும் சூரபன்மன் அச்சுறுத்தினன். பலகாலம் பஞ்சுபோற் பறந்து, கரும்புபோல் நசுக்குண்டு வருந்திய தேவர்கள் முருகவேள் திருமுன் வந்து முறையிட வடிவேலிறைவன் சூரபன்மனை மாய்த்தருளினர்.

கிரியில்:—

இலக்கத் தொன்பான் வீரர்களும் தாரகன் செய்த சூழ்ச்சியால் கிரௌஞ்ச மலையில் மயங்கிக் கிடப்ப, கந்தவேள் வேற்படையால் அம்மலையைப் பிளந்து வீரவாகுதேவர் முதலியோரைக் காத்தருளினர்.

கதிர்வேல்:—

கதிர் - ஒளி. வேல் - வெல்லுந்திறனுடையது. வெல் என்று பகுதியடியாகப் பிறந்து முதனிலை நீண்டு வேல் என்றாயிற்று.

இனி; சூரபன்மன் ஆணவமலம். மூலமலமாகிய அதனாலேயே எல்லாத் துன்பங்களும் ஆன்மாக்களுக்கு விளைகின்றன. கிரௌஞ்சமலை சஞ்சித வினைக்குவியல், வேல் சிவஞானம். சிவஞானத்தால் ஆணவமலந் தொலைய வினைத்தொகுதி சாம்பராயின.

தொண்டர் குழாம்:—

இறைவனை யடைவதற்கு அடியார் வழிபாடே எளிய நெறியாம். அதனாலன்றோ எமது சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகைபாடி எம்மை யுய்வித்தனர்.

அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே.

என்றார் எமது தாயுமானப் பெருந்தகையார்.

பசுவினிடம் பால் கறக்கப் புகுவான் அதன் கன்றைத் துணைகோடல் போல், இறைவனது திருவருளைப் பெற விரும்புவோன், அவரடியாரைத் துணை கோடல் வேண்டும்.

"துரும்பனே னென்னினுங் கைவிடேல் நீதியோ
தொண்டரொடு கூட்டு கண்டாய்"

—தாயுமானுர்.

"மறமலி யுலகவாழ்க்கையே வேண்டும்
வந்துநின் அன்பர்தம் பணியாம்
அறமது கிடைக்கின்"

—தாயுமானுர்.

ஆண்டவன் அடியாருள்ளத்தில் இமைப்போதும் நீங்காதுறைகின்ருஞதலால் இறைவழிபாட்டினும் அடியார் வழிபாடே சாலச்சிறந்ததாகும். அதனாலன்ரோ முற்றத் துறந்த முழுமுனிவராகிய பட்டினத் தடிகள் இறைவழிபாட்டைபின்னும் அடியாருறவை முன்னுமாக வைத்து அருளிச் செய்தனர்.

"அடியா ருறவு மரன்பூசை நேசமும் அன்றியிந்தப்
படிமீது வேறு பயனுளதோ"

"அடியார்வாழ் சபையி னேற்றியின் ஞானபோதமும்
அருளி" என்ரூர் அருணகிரியாரும்.

அடியவரிடத்து அன்பு செய்து அப்பூதி நாயனார், பெருமிழலைக் குறும்பர், சிறுத்தொண்ட நாயனர், பத்திரகிரியார், கலிசைச் சேவகனூர் முதலியோர் பெறுதற்கரிய பெருவாழ்வு பெற்றனர்.

உடையா ளுன்ற னடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானு லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்குமரு ளைப்புரியாய் பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும்வண்ண முன்னின்றே
—மாணிக்கவாசகர்.

தாவடி:—

தாவடி - பிரயாணம். "தாவடியோட்டும் மயிலிலுந் தேவர் தலையிலும் என் பாவடி யேட்டிலும் பட்டதன்ரே" என்ரூர் பிறிதோரிடத்திலும். 'போர்' என்று பொருள்கொள்வாரும் உளர்.

தேரிற்கரியிற்...........நீரிற்யோழி:—

தேர், யானை, குதிரை முதலிய ஊர்திகளின்மீது ஊர்ந்து உலாவரும் பெருந்தகவுடைய அரசர்களது செல்வம் யாவும் நீர்மேல் எழுதிய எழுத்து எவ்வாறு ஒரு கணத்திற்குள் மறையுமோ அவ்வாறு நிலையற்றதாகும்.

குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடை மெலிந்தோரூர் நண்ணினு நண்ணுவர்
—நறுந்தொகை.

செல்வம் என்ற சொல்லுக்கே நீங்குவோம் என்றுதானே பொருள்.

"நீர்க்குமிழிக்கு நிகரென்பர் யாக்கை நில்லாது செல்வம்
பார்க்குமிடத்தந்த மின்போலும் என்பர்"
—அருணகிரியார்.

நீரிற் குமிழி இளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரின்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று.
—குமரகுருபரர்.

பாவிநெடு நெஞ்சமே:—

நெடு நெஞ்சம் நீண்ட எண்ணங்களுடன் கூடிய நெஞ்சம். அடியார் குழுவில் கூடாமையால் மனத்தைப் பாவி என்றழைத்தனர்.

மனம் ஒருகணமும் ஓய்வின்றி பலகோடி எண்ணங்களை எண்ணி எண்ணி இடருறுகின்றது.

"எண்ணாத எண்ணமெலாம் எண்ணி எண்ணி ஏழை நெஞ்சம்
புண்ணாகச் செய்ததினி போதும் பராபரமே"
—தாயுமானார்.

கருத்துரை.

மனமே! செல்வம் நிலையில்லாதது. நீ அதனைச் சாராமல் அறுமுகவள்ளலின் அடியார்களது திருக்கூட்டத்தைச் சார்ந்து உய்வு பெறுவாயாக.

வாழ்த்துப்பா.

கார்நிற வண்ணன் மேனாள் கடல்கடைந் தமுதங் கொண்ட(து)
ஆர்வுறப் பனுவல் கூற வறிந்தனம் கண்டோ மில்லை
பார் புகழ்க் கிருபா னந்த வாரிவாய்ப் படிந்திந் நாளில்
நேர்வுற அமிர்தங் கண்டோம் நிலையுற உட்கொண்டோமே.

திருப்புகழ்க் கிருபா னந்த செல்வன் நீடூழி வாழ்க!
விருப்புடன் அமிர்தம் வாழ்க! மெய்யுடை யன்பர் வாழ்க!
பொருப்பொடு தருவாஞ் சூரன் பொடிபட வமரர் வாழ
ஒருப்படை வேல்கைக் கொண்ட ஒருவனும் வாழ்க வாழ்க.

வே. ஆ. தணிகாசலம், காரியதரிசி,
செந்தமிழ்க் கழகம், கண்டாச்சிபுரம்.

ஓம் குஹாய நம:

சிவாநந்தலஹரீ

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது)

(மலர் 7 - 258-வது பக்கத் தொடர்ச்சி)

(97) ப்ரசரத்யபி4த: ப்ரக3ல்ப4 வ்ருத்யா
மதா3வாநேஷ மந: கரீ க3ரீயாந்!
பரிக்3ருஹ்ய நயேந ப4க்திரஜ்வா
பரம ஸ்தா2ணுபத3ம் த்3ருட4ம் நயாமும்||

பதவுரை.

பரம்	— எல்லாவற்றிற்கும் மேலானவரே!
மதவான்	— மதத்தை யுடையதும்
கரீயாம்	— பெரியதுமாகிய
ஏஷ:	— இந்த
மந: கரீ	— மனமாகின்ற யானையானது
ப்ரகல்ப வ்ருத்யா	— கம்பீரமான வியாபாரத்தால்
அபித:	— எங்தும் (நாலாபக்கங்களிலும்)
ப்ரசரதி	— திரிகின்றது
அமும்	— இதை - (இந்த மனமென்ற யானையை)
பக்திரஜ்வா	— அன்பு என்ற கயிற்றினால்
நயேந	— நயமாக
பரிக்ருஹ்ய	— இழுத்து
ஸ்தாணு	— நிலைபேறுடையதான்
பதம்	— மோட்சத்தில்
த்ருடம்	— உறுதியாக இருக்குமாறு
நய	— அடையச் செய்தருள்வீர்.

பொழிப்புரை.

ஓ பரம்பொருளே! மதங்கொண்ட என் மனமாகிய பெரிய யானையானது, தீயநினைவுகளுடன் பெரிய வியாபாரத்தினால் எங்கும் உலாவுகின்றது. அதனை நிலைபெற்ற முத்திவீட்டில் அன்புக் கயிற்றால் கட்டி இழுத்து எப்பொழுதும் அங்கு இருக்குமாறு அருள்புரிவீர்.

ஓம் குஹாய நம:

கந்தர் திருவிளையாடல்

"சென்னிமலைச் சிறப்பு"

(மலர் 7 - 223-ம் பக்கத் தொடர்ச்சி)

சரவணமுனிவர் செய்த அருட் பாடல்கள்.

விநாயகர்

சாற்றுமலை யாசலத்து மாமுனியைத் தண்டமிழாற்
றேற்றுமலை யானுகந்த சென்னிமலைச் சீர்கவிற்ற
தோற்றுமலை மானருளுஞ் சோதிவிழி யானைமுக
வாற்றுமலை விநாயகன் பதாம்புயத்தை யாம் பணிவாம்.

முருகர்

திருமுடிக ளிருமூன்று மூவிரண்டு திருமுகமுந் திகழ்நான் மூன்று
திருவிழியு மூன்றொன்று திருமகர குண்டலமுந் திருநான் மூன்று
திருமணிவா குவுந்திருக்கை முன்றொன்குஞ் சிரகிரிச்சேய்
திருநூன்மார்பும்
திருவடியு நூபுரமுந் திருவேலுந் துதித்துமனந் திருத்தி வாழ்வாம்.

தேவயானை—வள்ளியம்மை

கறைக்கோலப் பரங்கிரியிற் சிரகிரிச்சேவ் வேள்புணர்ந்த
நாம வேற்கண்
குறைக்கோல வெண்மதிவா ணுதற்றேவ குஞ்சரிதாள்
குறித்து வாழ்த்தி
மறைக் கோலக் கிழவுருவாய்ப் பணிந்து கந்தன் விநோதமண
மகிழ்ந்து மேவுங்
கறைக்கோல அயில்நெடுங்கட் குறக்கோல மடந்தைபதங்
கருதி வாழ்வாம்.

திருச்சந்தி விநாயகர்

உருச்சந்தி யாக்கைநரம் பிறைச்சிமச்சை மூளைமல முதுநீர்
தோயக்
கருச்சந்தியாது தொண்டர்க் கருள்புரிவோ னருளியசெய்
கழுநீர் வாவி
தருச்சந்தி யாவுவனங் கெழுசெழுநீட் சிரகிரிச்சார் தயங்கிவாழும்
திருச்சந்தி விநாயகன் சேவடிபோற்றி யிடையூறு தீர்த்துமன்றே.

திருமுகமலர்ந்த நாதர்.

மெய்யிலணி நீற்றினொளி விளங்குநிலாத் துண்டமதி
மிளிர் செவ்வேணி
ஐயனையை யைந்துருவா யாறுறு தத்துவங்க ளாயினானை
தையலொரு பாற்றபசு வீற்றிருப்ப அருள்புரியுந் தலைவன் றன்னை
செய்யதிரு முகமலர்ந்த தேவையடி போற்றிவினை தீர்த்துமன்றே.

திருந்தார்குழலி

முருந்தார்வெண் ணகையாளை முதிராமென் முலையாளை
முழுநீர் நீலந்
தருந்தாரை விழியிலருள் பொழிந்தாளைத் தனிநுதற்கட்
டலைவர் பால்வீற்
றிருந்தாளை யுலகமெலா மீன்றாளை யீன்றபடி யறமெண் ணான்கும்
வருந்தாது புரிதிருந்தார் குழலுமையை மலர்தூவி வணக்கஞ்
செய்வாம்.

காவணந்தி யடிபோற்றி இலக்கத் தொன்பான்
கணங்களா கியவீரர் கழல்கள் போற்றி
மேவுகவு ணியர் பெருமா னடிகள் போற்றி
வேலையிற் கன் மேன்மிதந்தோன் விரைதாள் போற்றி
நாவலவ னடிபோற்றி வாத வூரர்
நளினமலர் பதம்போற்றி நம்பர் செம்பொற்
சேவடி தாழ்ந் துயர் தண்டி முதலா மேன்மைத்
திருத் தொண்டத் தொகையினர் த ள் போற்றி போற்றி.

சென்னிமலைச் சேவகன்,பொற் றிருக்கை வேலுஞ்
சிகண்டியுங்குக் குடக்கொடியுந் திரளும் போற்றி

சென்னிமலைச் செய்பதம்வந் தனைக ளாற்றும்
சிவவிரதச் சைவவே தியர்தாள் போற்றி
சென்னிமலைச் செவ்வேள்சீ ரருள்பெற் றோங்கும்
தெளிதருநற் சிந்தையினர் திருத்தாள் போற்றி
சென்னிமலைச் சினகரங்குற் றேவலாற்றுந்
திகழுமகம் படிமையர்தாள் போற்றி போற்றி.

இடும்பைக் கிடும்பை இடும்பன் கழல்கண்
டிடும்பைக் கிடும்பைதரு வேன்.

அரம்பையர்கள் கவரி வீசவும், நாரதாதி மகரிஷிகள் இனிது பாடவும், மேனகை முதலியோர் ஆடவும், வசிஷ்டாதி முனிவர் குழாங்கள் சூழவும், காமதேனு, கற்பக விருக்ஷம், சிந்தாமணி, உச்சைசிரவம் முதலியன நின்று சேவிக்கவும், சசிதேவியுடன் பொற்சிங்காதனத்தில் தேவர் கோமானாகிய இந்திரன் கொலுவீற்றிருந்தான். அங்கு நாரதமுனிவர் ஆயிரம் தந்திகள் பூட்டிய மகதி யாழை மீட்டிக் கல்லும் உருகக் கானம் புரிந்து கொண்டிருந்தனர். இந்திரன் அவரை நோக்கிப் புன்முறுவல் செய்து கூறுவான்.

"சீலமுலாவிய நாரதரே! தங்கள் வீணாகானம் மிக்க இனிமையாக இருக்கின்றது. செவியும் சிந்தையும் களிகூர்ந்தன. தாங்கள் இன்று ஓர் விளையாடல் செய்து உமது ஆற்றலை வெளிப்படுத்தி யருளுமாறு வேண்டுகிறேன்" என்றனன். யாழ்முனிவர், "ஆயிரங் கண்களுடைய அமரர் கோவே! நின் விருப்பப்படியே ஓர் வேடிக்கை காட்டுகின்றேன்; விடைதாரும்" என்று கூறி வீணையை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். விண்வழியே வந்து, உலகெலாம் ஒரு முடியிற் றாங்கும் ஆதிசேடனிடம் சென்றார். சேடன் நாரதரைக் கண்டு, "வாருங்கள்; முனிவரரே! வந்தனம். தங்கட்கு நல்வரவு, த[illegible] காரணம் யாதோ? கூறியருளும்" என்ற[illegible]

நாரதர், "உலகந்தாங்கும் அலகிலா வலியுடை ஆதி சேடனே! நான் உலகவலம் வரும்போது வடமேற்றிசைக் காவலனாகிய வாயுதேவனைக் கண்டு பேச நேர்ந்தது. நினது அளவிலாப் பெருமையையும், பூவுலகை ஒரு பொன்முடியில் மிக எளிதாகத் தாங்கும் நின் ஆற்றலின் அருமையையும், எடுத்துக் கூறினேன். அப்போது அவ் வாயுதேவன் பொறாமையால் உள்ளம் புழுங்கிச் சில வார்த்தைகள் கூறினான். அதனைக் கேட்டு உள்ளம் புண் பட்டு இங்கு வந்தேன். அன்பனே! நான் அவற்றை என்னவென்று கூறுவேன்" என்று கூறி பெருமூச்சு விட்டார். ஆதிசேடன் அதுகேட்டு, உள்ளத்தில் சினக் கனல் மூண்டு, "நாரதரே! அவ்வறிவு கெட்ட வாயு தேவன் யாது கூறினான். விரைவில் சொல்லும்" என்றான். நாரதர் புன்முறுவல் செய்து "அப்பனே! அன்புமிக்க உன்னிடம் நான் அதனைக் கூறுதிருக்கவும் முடியவில்லை. "எல்லாம் தன்னுடைய பெருமையாலேயே நடக்கின்ற தென்றும், தனக்குச் சமானமானவர் உலகில் ஒருவரு மில்லையென்றும், சேடனாகிய நினக்கு யாதொரு செய லும் இல்லையென்றும், நீ சொன்ன குற்றத்தை முதல் முறையாதலால் பொறுத்தேன் என்றும், இனி இப்படி அவ்வெளிய பாம்பினைப்பற்றி எங்கும் புகழ்ந்து பேசா தேயுமென்றும், பலவாறு கூறினான். அவற்றையெல்லாங் கேட்டு எனக்கு மிகுந்த மனவருத்த முண்டாயிற்று. உனக்கும் எனக்கும் பல காலமாக இருக்கும் நட்பின் றகைமையால் நின்னிடம் கூறினேன்' என்று மிகுந்த சமர்த்துடன் சொன்னார்.

இவற்றை யெல்லாங் கேட்ட சேடன் வெகுளித் தீயால் வெதும்பி எழுந்து பெருமூச்சுவிட்டு, கண்களில் கனற்பொறி பறக்க, "வாயுவின் ஆற்றலும் தற்பெருமை யும் நன்[illegible]வனுடைய ஆற்றலை யான் அறிகின் றேன்[illegible] சென்று [illegible] மேருகிரியின் சிகரங்களை எனது

ஆயிரம் பணாமகுடங்களால் மறைக்கின்றேன். அவ்வறி வற்ற வாயுவுக்கு வலிமையுளதேல் என் பிணிப்பை விலகச் செய்யட்டும்'' என்றான். புனைந்துரை புகன்ற யாழ்முனிவர் அவ்விடத்தினின்றும் நீங்கி வாயுதேவன் பால் சென்றனர். வாயுதேவன் அவருக்கு வந்தனஞ் செய்து இருக்கை நல்கி இன்னுரை கூறினான். நாரதர் மிகவும் மனங் கொதித்திருப்பதுபோல் முகம்வாடி பெரு மூச்சுடன் நின்றதை வாயுதேவன் கண்டு, "சுவாமி! தேவரீர் இவ்வாறு ஒருநாளுமில்லாத கோபமும் தாபமுங் கொண்டிருப்பதேன்? உம்மை யாராவது இகழ்ந்தார் களா? அப்படி இருக்கின் கருணை கூர்ந்து கூறுங்கள். அவன் தலையை ஆயிரந் துண்டங்களாக நொறுக்குகின் றேன்'' என்றான்.

நாரதர், "அன்பனே! என்னை யாரும் இகழ்வாரில்லை. இகழினும் அவன்பொருட்டு நான் வருந்தேன். என் அன்பர்களை யாராவது இகழ்ந்தால் மனம் பொறுக்க வில்லை. எனது அன்பர் சிகாமணியாகிய உன்னைப்பற்றி அறிவுகுறைந்த ஆதிசேடன் இகழ்ந்து கூறியதை எண் ணுந்தோறும் இதயம் துடிக்கின்றது. நான் அதனைத் திரும்பவும் என் வாயால் கூறுவதற்குக் கூசுகின்றேன். எல்லாவற்றுக்கும் இறைவன் சாட்சியாக இருக்கின்றான், ம்......'' என்றார். வாயுதேவன் "முனிவரரே! அந்த அற்பன் என்ன கூறினான்? விரைவில் கூறியருளும். அவனை ஒருகை பார்க்கிறேன்'' என்று கொதித்துக் கேட்டனன். நாரதர், "அன்புமிக்க ஆர்வலனே! இனி அதனை ஒளிப்பானேன். கூறுகின்றேன். கோபிக்காமல் கேள். இன்று பாதலத்திற் சென்று சேடனைத் தற்செய லாகப் பார்த்தேன். ஏதோ பேச்சோடு பேச்சாய் உனது புகழைப்பற்றி யான் கூறினேன். எங்கே போனாலும் உனது வீரப்பிரதாபத்தை கூறுவது எனது வழக்கம். அப்படியே இன்று அந்த பொறாமைக்காரனிடம் கூறி னேன். அவன் அதுகேட்டு உள்ளம் பொறுணய் கொதிப் புற்று, "இனி அந்த அற்பனாகிய காற்றினுடைய புகழைப்

போமீர்; இது முதன்முறையானதால் மன்னித்தேன். ஒரு நரியின் புகழை சிங்கத்தின் முன் கூறுவதோடொக்கும்" என்று பலப்பல கூறி நிந்தித்தான். என்மனம் மிகவும் கவன்றது. ஆதிசேடனே! அங்ஙனம் பழிக்காதே. இது அழகன்று. உலகிலுள்ள உயிர்களெல்லாம் பிராணவாயு இன்றேல் வாழமுடியுமா? காற்று இன்றேல் உலகம் நிலைபெறாது. முருகப்பெருமானுக்கு வாயுதேவனன்றோ தேர் நடாத்தினன். வாயுவின் பெருமை வானளாவியது" என்று உள்ளதை உள்ளவாறு கூறினேன், அதனையும் அவன் உட்கொள்ளாமல், "ஓய் நாரதரே! மீண்டும் வெற்றுரை தொடுக்கின்றீர். வடமேருகிரியின் சிகரங்களை நான் பொதிந்து நிற்பேன். அவ்வாயுவுக்கு வலிமையுண்டேல் என்னை அசைத்து அவன் ஆற்றலை வெளிப்படுத்தட்டும்" என்றான். நீ எனக்கு மிகவும் உயிர்த்தோழனாதலின் இதனை உனக்கு உணர்த்தினேன். உனது விருப்பம் எப்படியோ அப்படி நடந்துகொள். ஆயினும் அந்த அற்பனை அடக்கினால்தான் மீண்டும் இப்படி வீறு கொண்டாடமாட்டான். உனது உளம்போல் செய்" என்று கூறி விடைபெற்றுச் சென்றார். (தொடரும்)

கண எண்ணெய்

சித்தாமணக் கெண்ணெய்	பலம்	இரண்டரை
மணத்தக்காளிச் சாறு	,,	அரை
வெங்காயச் சாறு	,,	அரை
வில்வக் கொழுந்து சாறு	,,	அரை

கால்பலம் வெந்தயத்தை முதல்நாள் ஊறவைத்து மறுநாள் எடுத்தரைத்து மற்றவையோடு கலந்து எரித்து வடித்து ஆறினபின் சீசாவில் வைத்துக்கொண்டு, சாதாரணமாக விளக்கெண்ணெய் தருவதுபோல் 2, 3 நாட்களுக்கு ஒருமுறை காலையில் கொடுக்க கணச்சூடு தணிந்து புஷ்டியாகும். அல்லது நாள்தோறும் சிற்றளவாக ஒரு பைசா எடை காலையில் உட்கொள்ளலாம். பழையசாதம், அழுகிய பதார்த்தம் முதலியவற்றை விலக்க வேண்டும்.

ஓம் குஹாய நம:

கற்பு.

குமாரபுரியில் குருமூர்த்தியை யறியாதார் ஒருவருமிலர் குருமூர்த்தி ஒரு தனி மனிதன். அவனுடைய நற்குணங்களால் அவனை எல்லோரும் நேசித்தார்கள். அவனுடைய உள்ளத்தில் எப்போதும் பக்தி வெள்ளம் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. நல்ல கல்வியறிவும் உடையவன்.

உள்ள நிறைக் கலைத்துறைக ளொழிவின்றிப் பயின்றவன்றாற்
றெள்ளிவடித் தறிந்த பொருள் சிவன்கழலிற் செறிவென்றே
கொள்ளுமுணர் வினின்முன்னே கூற்றுதைத்த கழற்கன்பு
பள்ளமடை யாயென்றும் பயின்றவரும் பண்புடையார்.

என்ற எமது தெய்வச் சேக்கிழார் திருவாக்குபோல் தான் பலகாலும் பயின்ற கல்வியறிவின் பயன் இறைவனை வழிபட்டு அன்பு செய்வதே என்று உணர்ந்த உத்தமன். இரைதேடுவ தோடு இறையுந் தேடுபவன். நம் குருமூர்த்தியின் பண்டைத் தவமே ஓர் உருவெடுத்து வந்ததுபோல் அவனுடைய இல்லக் கிழத்தி ஞானபூஷணி அமைந்திருந்தனள். ஞானபூஷணி கணவனுடைய கழலே தனக்குப் பற்றுக்கோடாக வழிபடுபவள். அவளுடைய மனம் மாசற்றது. கணவனுடைய வாக்கே வேத வாக்காகவும், கணவன் அருகிலிருப்பதுவே சுவர்க்க உலக வாச மாகவும், கற்பு ஒன்றே விலைமதிக்க முடியாத மாணிக்கமாகவும் எண்ணி இன்புற்றிருந்தனள். செல்வமும் குவிந்திருந்தது. அவ் ஊரில் மாயாண்டி என்பவன் குருமூர்த்திக்கு மிக்க நண்பனாக இருந்தான். ஆயினும் மாயாண்டியினிடம் ஞானபூஷணிக்கு நல்ல கருத்து இல்லை. அவன் ஒரு வஞ்சகன் என்று அவள் உள்ளத்தில் ஓர் உணர்ச்சி தன்னை யறியாமலேயே உணர்த்திக் கொண்டிருந்தது.

அவ்வூரில் ஒரு சமயம் எங்கும் கள்ளர் பயம் அதிகரித்தது. இதனால் செல்வமுடையவர்கள் கலங்கினார்கள். அந்தக் காலத்தில் பாங்குகள் கிடையா. நோட்டுகளும் கிடையா. எல்லாம் பொன்

வெள்ளி நாணயங்களாகவே இருந்தன. அதனைக் கள்ளர்க்குப் பயந்து புதைத்து வைக்கின்ற வழக்கம். அக்காலத்தில் மிகுதியும் உண்டு.

"அத்தமெல்லாம் ஆழப்புதைத்து வைத்தால்
வருமோ நம் அடிப்பிறகே"

"பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைக்கும்"

என்ற வாக்குகள் இதுகுறித்து எழுந்தன.

குருமூர்த்தி ஒருநாள் தனது அரிய நண்பனுகிய மாயாண்டியை நோக்கி, "அன்பனே! ஊரில் ஆங்காங்கு திருடு மிகுந்து வருகின்றது. என்னிடத்தில் 3000ம் பொற்காசுகள் இருக்கின்றன. அவற்றை ஒரு தவலையிலிட்டு நமது தோட்டத்தில் இருக்கும் புளியமரத்தடியில் புதைத்து வைக்கலாம் என்று எண்ணுகின்றேன்" என்றான். மாயாண்டி, "அன்ப! இது நல்ல யோசனைதான். இரவே அப்படி செய்துவிடலாம்" என்றான். அன்றிரவு 12 மணிக்கு குருமூர்த்தியும் மாயாண்டியும் ஒருவருமறியாமல் 3000ம் பொன் நாணயங்களை ஒரு தவலையிலிட்டு மூடி துணியால் பொதிந்து, தோட்டத்திலுள்ள புளிய மரத்தடியில் ஆழமாகத் தோண்டிப் புதைத்து விட்டார்கள். மாயாண்டி தன் வீடுபோய் படுத்தான். அவன் மனத்தில் ஏதோ பல நினைவுகள் வந்து அலைமோதிக் கொண்டிருந்தன. கண்மூடியும் நித்திரை வராது புரண்டு கொண்டிருந்தான். ஞானபூஷணிக்குத் தன் கணவன் செய்த இந்தக் கருமம் சரியானதென்று படவில்லை.

பொழுது புலர்ந்தது. ஞானபூஷணி கணவனை நோக்கி, "பிராணேசா! மாயாண்டி உயர்ந்த உள்ளமுடையவனல்லன் என்பது எனது கருத்து. தாங்கள் பொற்காசுகளை அவனையும் வைத்துக்கொண்டு புதைத்தது சரியன்று. கள்ளர்பயமென்று எண்ணி பகற்கள்ளனிடம் கொடுத்துவைத்தது போலும்" என்றாள். குருமூர்த்தி, "பயித்தியமே! மாயாண்டியைப்பற்றி நீ அப்படி நினைப்பது தவறு அவன் பரம யோக்கியன். நமது நலத்தைக் கருதுபவன். மாசற்ற மனமுடையவன். அவனை நீ இப்படி தவருக எண்ணுதே" என்று சமாதானஞ் செய்தான். ஆயினும் அவள் மனம் ஆறுதலை யடையவில்லை.

ஒருநாள் குருமூர்த்தியும் மாயாண்டியும் தொழிற்சம்பந்தமாக வெளியூர் சென்றனர். மாலைநேரம், மாயாண்டி "குருமூர்த்தி! காற்றுவாங்கிவிட்டு வரலாம் வா" என்று அவனை

அழைத்துக் கொண்டு ஊர்க்கப்புறம் சிறிது நேரம் உலாவி
ஒரு கிணற்றின் கரையில் இருந்தார்கள். பலப்பல விஷயங்களைப்
பற்றி இருவரும் உரையாடிக் கொண்டிருந்தார்கள். வஞ்சனையே
வடிவாகிய மாயாண்டி "குருமூர்த்தி! இதோ பார்; இந்தக் கிணற்
றில் எவ்வளவு பெரிய மீன் உலாவுகின்றது" என்று காட்டினான்.
குருமூர்த்தி எட்டிப் பார்த்தான் மாயாண்டி அவனைக் கிணற்றில்
தள்ளிவிட்டு ஓடினான் குருமூர்த்தி "முருகா! முருகா!" என்று
கூவிக்கொண்டே வீழ்ந்தான்.

மாயாண்டி தனது எண்ணம் நிறைவேறி விட்டதென்று
மனங்களித்தான். குமாரபுரிக்கு வந்தான். அன்றிரவு குருமூர்த்தி
யின் வீட்டின் பின்புறத்தில் புதைத்துவைத்த புதையலை
எடுத்துக் கொண்டுபோய் தனது வீட்டில் சேமித்து வைத்தான்.
குருமூர்த்தியைக் காணவில்லையென்று ஊரெங்கும் கலவர
முண்டாயிற்று. ஞானபூஷணி தன் கணவனைக் காணாது வருந்தி
னாள். "எம்பெருமானே! என் கணவனைக் காணவில்லையே. எங்கு
சென்றாரோ? என்னமோ? என் மனம் துடிதுடிக்கின்றதே.
பாவி மாயாண்டி மதிமோசஞ் செய்தானோ யாதோ? இன்னது
செய்வதென்றறியேனே!" என்று ஏங்கினாள். மாயாண்டியைப்
பார்த்து "அண்ணா! அவர்கள் எங்கே? உங்களுடன்தானே
வந்தார்?" என்று கேட்டாள். மாயாண்டி "அம்மா! நானும்
அவரும் போயிருந்தோம். அவர் எங்கோ வியாபார சம்பந்த
மாகப் போவதாகச் சொல்லிவிட்டு நீங்கினார்" என்று கூறினான்.

சில தினங்கள் கழிந்தன. ஞானபூஷணிக்கு வரவர கவலை
மீறியது கையில் காசும் இன்றி கலங்கினாள். தோட்டத்தில்
புளியமரத்தடியில் புதைத்து வைத்திருக்கும் புதையலை எடுக்க
எண்ணி அகழ்ந்து பார்த்தாள். அங்கு ஒன்றும் இல்லாதிருப்பது
கண்டு திகைத்தாள். மாயாண்டி எடுத்துக் கொண்டான் என்று
உணர்ந்தாள். திருவருளை நினைந்து நினைந்து உருகினாள்.

மாயாண்டியினால் தள்ளப்பட்டு கிணற்றில் வீழ்ந்த குரு
மூர்த்திக்கு நீந்தத் தெரியாது. தண்ணீரைக் குடித்து திக்குமுக்
காடினான். கிணற்றில் விழும்போது படியில் பட்டு தலையிலும்
மிகுந்த காயம்பட்டது தற்செயலாக ஆங்கு ஓர் ஆமேய்ப்பான்
நீரருந்த வந்து கிணற்றில் இறங்கினான். அதற்குள் தவிக்கின்ற
குருமூர்த்தியைக் கண்டு உள்ளம் இரங்கினான். விரைந்து தண்ணீ
ரில் குதித்து குருமூர்த்தியைத் தூக்கிக் கரையில் வளர்த்தினான்,

தன்னால் முடிந்த சிகிச்சையைச் செய்தான். திருவருள் துணை செய்தது. குருமூர்த்தி நெடு நேரத்திற்குப் பின் கண் விழித்தான். மண்டையில் பெருத்த அடி. அதனால் மீண்டும் அயர்ச்சி யுற்றான். மாடு மேய்ப்பான் அவனைத் தாய்போல் எடுத்துக்கொண்டு போய் சிறந்த இரண வைத்தியனிடஞ் சேர்த்தான். அங்கு சில மாதங்களில் குருமூர்த்தி பூரணகுண மடைந்தான். தன்னை மாயாண்டி கிணற்றில் தள்ளியதையும், ஆமேய்ப்பான் எடுத்துக் காப்பாற்றிய கரையற்ற கருணையையும், மருத்துவன் காட்டிய கைம்மாறு கருதாத உதவியையும் எண்ணி எண்ணி உள்ளம் உவந்தான்.

பின்னர் தனது ஊர் வந்தான். இல்லம் சேர்ந்தான். ஞானபூஷணி தனது கணவனைக் கண்டு கரையற்ற களிப்புற்றனள். போன உயிர் திரும்பி வந்ததுபோல் உவந்து ஓடி கால்மேல் வீழ்ந்து கண்ணீரால் திருவடிகளை மாற்றினாள். குருமூர்த்தி தனது மனைவியைத் தழுவி அவளது கண்ணீரை மாற்றினான். மாயாண்டி செய்த வஞ்சனையைக் கூறினான். "பெண்ணே! நீ அன்று சொன்னது சரியாகிவிட்டது. அவன் வஞ்சனையை உணராது கெட்டேன்" என்று நிகழ்ந்த யாவுங் கூறினான். ஞானபூஷணி "நாதா! தாங்கள் இப்போதாவது அப்பாவியின் நட்பைத் துறந்து விடுங்கள். அன்று தாங்கள் புதைத்து வைத்த புதையலையும் அப்பாவி எடுத்துக் கொண்டு போய்விட்டான். இனி அதுபற்றி நாம் சிந்திப்பதில் பயனில்லை. தாங்கள் உயிர் பெற்று வந்ததே போதும். பாழும் பணம் போனால் போகட்டும்" என்றாள். குருமூர்த்தி "கண்ணே! நின் நல்லுரையைக் கேளாததால் நான் இத்துணைப் பெரிய இடர்ப்பட்டு நொந்தேன். இனி நமது செல்வம் வருவதற்கு ஏதாவது வழியுண்டா?" என்று கேட்டான். ஞானபூஷணி, "அன்பே! தாங்கள் அது பற்றிக் கவலவேண்டாம். நான் அதற்கு ஒரு யுக்தி சொல்லுகிறேன். நாளைகாலை இரண்டு தவலையை துணியால் பொதிந்து வைக்கிறேன். தாங்கள் மாயாண்டியிடம் போய், புதையல் காணவில்லை யென்று கூறாது, இனிமையாகப் பேசி, எதிர்பாராத விதமாய் வியாபாரத்தில் நிரம்பப் பணங் கிடைத்ததாயும், 6000ம் பொற்காசு இருப்பதாயும், இரண்டு தவலையில் நிரப்பி இருப்பதாயும், முன் புதைத்த தவலையுடன் இவற்றையும் சேர்த்துப் புதைக்கவேண்டு மென்றும்" சொல்லுங்கள். அதில் நன்மையுண்டாகும்" என்றாள்.

குருமூர்த்தி மாயாண்டி வீட்டிற்குப் போனான்; மாயாண்டி இவனைக் கண்டு திகைத்துப் போனான். வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், "குருமூர்த்தி! கிணற்றில் நீ தவறி விழுந்துவிட்டாயே; உன்னை எடுக்க பலவகையாக முயற்சி செய்தும் பயன் பெறவில்லை; வாளா திரும்பினேன்; நீ பிழைப்பாயா என்று தெய்வங்களையெல்லாம் வேண்டினேன்; எனது எண்ணம் பலித்தது; எப்படி தப்பித்தாய்" என்று தேனொழுகப் பரிந்து கேட்டான்; குருமூர்த்தி "மாயாண்டி! நான் அன்று எப்படியோ வழுவி கிணற்றில் விழுந்துவிட்டேன்; திருவருள் காப்பாற்றியது; ஒருவாறு தப்பி அங்கிருந்து சில ஊர்களுக்குப் போய் வியாபாரம் செய்தேன்; எதிர்பாராத விதமாய் ஊதியம் நிறையக் கிடைத்தது. 6000ம் பொற்காசு கிடைத்தது; அதனை வீட்டில் வைக்க அச்சமாயிருக்கின்றது; முன் நாம் புதைத்தோமே அதனுடன் சேர்த்து இதனையும் புதைத்து விடலாம் என்று எண்ணுகிறேன்; உன்னுடன் கலவாமல் எதனையும் நான் செய்கிலேன்; இரவு 12 மணிக்கு நீ வா" என்றான்; மாயாண்டி தான் செய்த வஞ்சனையை குருமூர்த்தி உணரவில்லை யென்று எண்ணினான்; ஏதோ ஒன்று அவன் உள்ளத்தில் உதித்தது; "குருமூர்த்தி! இன்று இரவு வேண்டா; நாளை இரவு செய்வோம்" என்றான்; குருமூர்த்தியும் "சரி" என்றான்;

மாயாண்டி தனக்குள் கீழ்வருமாறு சிந்திப்பான்; "புதைத்து வைத்த மூவாயிரம் பொன்னையும் நாம் களவு செய்தோம்; இப்போது அது இல்லையானால், ஆறாயிரம் பொன்னையும் புதைக்க மாட்டான்; இன்றிரவு அதனைப் பழையபடியே புதைத்து வைத்துவிட்டால், நாளை இரவு ஆறாயிரம் பொன்னையும் புதைத்து விடுவான்; பிறகு எல்லாவற்றையும் மொத்தமாகக் கொண்டுவந்து விடலாம்" என்று எண்ணினான்; இரவு வந்தது; ஒருவரு மறியாவண்ணம் மூவாயிரம் பொன்னடங்கிய தவலையை முன்னிருந்த இடத்திலேயே புதைத்து வைத்துவிட்டான்;

பொழுது விடிந்தது; இப்படி நிகழும் என்று முன்னரேயே நுண்ணிய அறிவினால் எதிர்பார்த்திருந்த ஞானபூஷணி, "தன் கணவனை நோக்கி, ஆர்வம் நிறைந்த ஆருயிர்த் துணைவரே! நமது பணம் முன்னிருந்த இடத்திற்கு திரும்ப வந்துவிட்டது; போய்ப் பாரும்" என்றாள்;

குரு:— பெண்ணே! எப்படி வந்துவிடும்.

ஞான:— அதில் சிறிதும் ஐயமில்லை. நிச்சயமாகப் போய்ப்பாரும் புதையல் இருக்கின்றது.

குரு:— நேற்றுதானே பார்த்தோம். இல்லையே.

ஞான:— இரவு மீளவும் அங்கு அது வந்துளது.

குரு:... உனக்கு ஜோதிஷம் தெரியுமோ?

ஞான:— அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. ஊகந்தான்.

இருவரும் போய் தோண்டிப் பார்த்தார்கள். புதையலைக் கண்டு குருமூர்த்தி அதியற்புதமுற்றான். எடுத்துக் கொண்டுவந்து பெட்டியில் வைத்தான். "பெண்ணே! எப்படி வந்தது?" என்று கேட்டான். ஞானபூஷணி "நாதா! ஆறுயிரம் பொன் புதைப்பதாக மாயாண்டியிடம் சொன்னதால் புதையல் இல்லையென்றால் அதைப்புதைக்க மாட்டோமென்று அவன் எண்ணி, இதைப் புதைந்து வைத்தான். ஆறுயிரம் பொன்னைப் புதைத்தவுடன் சேர்த்து முழுவதையும் எடுத்துக் கொள்ளலாமென்று எண்ணி இதைப்புதைத்தான். இதுதான் நிகழ்ந்தது" என்றாள். மனைவியின் மதி நுட்பத்தை உன்னி உடல்பூரித்தான் இரவு பட்டது மாயாண்டி வந்தான். "குருமூர்த்தி! ஆறுயிரம் பொன்னையும் புதைக்கலாமா?" என்றான் குருமூர்த்தி 'மாயாண்டி! என் மனைவி வேண்டாமென்று கூறுகிறாள். அவள் தகப்பனுருக்குப் பணம் தேவையாம். ஆதலால், முன் புதைத்துவைத்த புதையலையும் எடுத்து மாமனார் வீட்டிற்கு அனுப்பிவிட்டேன்' என்றான். மாயாண்டி, தான் ஏமாந்ததற்கும், வாய்த்தவிடும்போய் அடுப்பு நெருப்பும் போனதுபோல், தன் வஞ்சனை பலியாததற்கும் வருந்தினான். அன்றுமுதல் மாயாண்டி நட்பை குருமூர்த்தி அறவே வெறுத்தான். மாயாண்டி வஞ்சகத்தால் தானே கெட்டு வறுமையால் வெந்தழிந்தான் ஞானபூஷணியின் அறிவு நுட்பத்தால் குருமூர்த்தி இனிது வாழ்ந்தான்.

உயர்ந்த வேலைப்பாட்டுக்குக் காரண்டி
அசல் வெள்ளிசாமான்களும், வெள்ளி நகைகளும்
உத்திரவாதத்துடன் கிடைக்கும் இடம்.

வ. ரு. புருஷோத்தம செட்டியார்

தங்கம், வெள்ளி நகை வர்த்தகம்
(பூஜைக்குகந்த வெள்ளி உருவப் படங்களும் கிடைக்கும்)
நெ. 47, சைனாபஜார் ரோட்டு, சௌகார்பேட்டை, மதராஸ்.

வெகு சரசம்! உத்திரவாதம்!!

எங்கள் சொந்த தறியில் தயார் செய்யும்

பட்டு-பாவாடை, ஜரிகை-ரவிக்கை.

பட்டு-சேலை தினுசுகள்

சாயத்திற்கும் ஜரிகைக்கும்

உத்திரவாதத்துடன் கொடுக்கப்படும்.
வேண்டியவர்கள் உடனே ஆர்டர் செய்யவும்

எஸ். ஆர். ஆதிநாராயண முதலியார்,
எஸ். எஸ். சம்பந்தமூர்த்தி முதலியார்.

பட்டுஜவுளி வியாபாரம், திருக்கச்சிநம்பிதெரு, சின்னகாஞ்சிபுரம்.

நம்பிக்கைப்பெற்ற ஆயுர்வேத ஔஷதங்கள்.

ஸோல்ஏஜண்ட்ஸ் யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர்தெரு, மதராஸ்.

தந்தி விலாசம் "சேமந்தகா" திருச்சி.



கிருஷ்ண பரமாத்மாவின் கிரீடத்தை அலங்
கரிக்கச் செய்தது சேமந்தகமணி.

ஆனால்

இவ்வுலக மக்களின் அழகை அலங்கரிக்கச்
செய்வது சேமந்தகா வைரங்கள்.

என்று

இதுவரையில் சேமந்தகா வைரங்களை
வாங்கிப் பூரண திருப்தி அடைந்தவர்களால்
போற்றப் படுகிறது.

இன்றுவரை வெளிவந்துள்ள வைரங்களில்
தலை சிறந்தது.

எமது

"சேமந்தகா வைரங்களே"

உறுதியிலும் ஜொலிப்பிலும் அசல்
வைரங்களைப் போன்றது.

ஒரு முறை பரிக்ஷித்துப்பாருங்கள்.

தோடு சைஸ் வைரம். பேசரி சைஸ் வைரம்.
1-க்கு 0—8—0.   1-க்கு 0—6—0.

கிடைக்குமிடம்:---

மேஸர்ஸ் ரங்கய்ய செட்டியார் சன்ஸ்

நகை வியாபாரம், திருச்சி.

மற்ற ஊர்களில் எமது அதிகாரம் பெற்ற
ஏஜெண்டுகளிடம் மட்டும் கிடைக்கும்

ஏஜெண்டுகள் தேவை.

Edited by Thirumuruga Kirupanandavari; Printed & Published by M. Madhusoodana Sivam, at the Thiruppugal Amirtham Press, Kangayanallur, Via Katpadi N. A.